★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: [illegible]

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: வைகாசி 16உ செவ்வாய் (29—5—56) ★ ★ வெளியூர்: வைகாசி 17உ புதன் (30—5—56) [இதழ் 227

அலிகார் பல்கலைக் கழகத்திற்கு சவூதி அரேபிய மன்னர் அன்பளிப்பு

மருத்துவக் கல்லூரிக்கு ரூ. 10 இலட்சம்

புதுடில்லி, மே 27—

அலிகார் பல்கலைக் கழகத்தில் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ள மருத்துவக் கல்லூரிக்காக சவூதி அரேபிய மன்னர் ரூ. 10 இலட்சம் நன்கொடை வழங்கி யிருக்கிறார் என்று தெரிய வருகிறது. பணம் பிரதமர் நேருவுக்கு அனுப்பப்பட்டுள்ளதாம்.

இந்தியாவில் குழம்பிப் போன மேதை யார்?

கொள்கைக் குழப்பத்திற்கு பெயர்போன கட்சி எது?

முன்னுக்குப்பின் முரண்படுவோர் நாட்டுக்குப் பயன்படுவரா?

கம்யூனிஸ்டுகள் கடைசி அந்தியாயத்தில் காலெடுத்து வைத்திருக்கிறார்களா?

இந்திய அரசியலில் கொள்கைக் குழப்பம் குறித்து

ஈ.வெ.கி. சம்பத் தெளிவுரை

இந்தியத் துணைக் கண்டத்திலேயே குழம்பிக் கிடக்கும் மேதை யார்?

இந்தியாவிலேயே கொள்கைக் குழப்பங்களுக்குப் பெயர் போன பெரிய மனிதர் யார்?

இந்தியாவிலேயே கொள்கைக் குழப்பங்களுக்குப் பெயர் போன—நமது ஆழ்ந்த அனுதாபத்திற்குறிய அரசியல் கட்சி எது?

இந்திய அரசியலில், பெரும் கொள்கைக் குழப்பங்கள் நிலவுவதற்குக் காரணம் என்ன?

தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள், இந்தக் கேள்விகளுக்கு மிகத் தெளிவான பதில்களை அளித்தார், திருச்சி மாநில மாநாட்டில்!

'இந்திய அரசியலில் கொள்கைக் குழப்பங்கள்' என்ற சிறப்புத் தலைப்பில் அவர் ஆற்றிய—குழம்பிக் கிடப்போருக்குத் தெளிவு தரும் அரியதோர் சொற்பொழிவின் ஒரு பகுதி இங்கு தரப்படுகிறது; மற்றப் பகுதிகள் தொடர்ந்து நாளை வெளி வரும்.

"இந்திய அரசியலே ஒரு பெரும் குழப்பம். அந்த குழப்பங்களுக்கிடையே பெரும் குழப்பங்களைத் தேடிப்பிடித்து குழம்பாமல் எடுத்துச் சொல்வது என்பது மிகக் கடினமானதாகும்.

"இந்திய அரசியலின் வரலாற்று ஏட்டைப் பொறுமையாக-அமைதியாக வாசிப்பவர்களால், அதில் நிலவும் கொள்கைக் குழப்பங்களைக் கண்டறிய முடியும்

"ஆங்கில அறிஞன் ஒருவன் கூறினன்—'பொதுமக்கள் எதையும் சீக்கிரத்தில் மறந்துவிடக் கூடிய சுபாவமுள்ளவர்கள்; எல்லாவற்றையும் நினைவில் வைத்துக் கொள்ளும் ஆற்றல் படைத்தவர்கள் அல்ல; இன்னொருவர் திறம்பட—உறுதியாக—விடாமல் எடுத்துச் சொன்னாலன்றி விஷயங்களை அவர்கள் நினைவில் வைத்துக் கொள்வது கடினம்'-என்று!

"அதனால்தான், இந்திய அரசியலில் நிலவும் கொள்கைக் குழப்பங்களைத் தொகுத்தெடுத்துச் சொல்ல வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம்,

"இந்தியத் துணைக் கண்டத்திலேயே மிகவும் குழம்பிப் போன மேதை பண்டித நேரு என்றால், பலர் திடுக்கிட்டுப் போவார்கள். இந்தியாவிலேயே கொள்கைக் குழப்பங்களுக்குப் பெயர் போன பெரிய மனிதர் அவர் தான்!

"இந்தியாவிலேயே கொள்கைக் குழப்பங்களுக்குப் பெயர் போன ஒரு கட்சி உண்டென்றால் அது நமது அனுதாபத்திற்குரிய இந்திய கம்யூனிஸ்டுக் கட்சிதான்.

"1935, 1940, 1945, 1948, 1949, 1956 என்று தொடர்ச்சியாகக் கடந்த 20 ஆண்டுக் காலத்தில் கம்யூனிஸ்டுக் கட்சியினர், கொள்கைத் துறையில் எத்தனை 'குட்டிக்கரணங்கள்' அடித்திருக்கிறார்கள்—எத்தனை முறைகள் முன்னுக்குப் பின் முரணாகப் பேசி வந்திருக்கிறார்கள் என்பதை, அவர்களது கட்சிப் பத்திரிகைகளின் பழைய 'பைல்'களைப் புரட்டினால் தெரிந்துகொள்ள முடியும்.

"அதே போல, பண்டித நேரு, கடந்த காலத்தில், எத்தனை முறை கொள்கைக் குழப்பங்களில் சிக்கித் தவித்திருக்கிறார் என்பதை, அவர் எழுதிய புத்தகங்கள்—அவர் பேசி

(4-ம் பக்கம் பார்க்க).

இலங்கை சர்க்காரின் சிங்கள வெறி

தமிழர்கள் கிளர்ந்தெழுகின்றனர்

ஜூன் 5-ந் தேதி அறப்போர் துவங்கும்

கொழும்பு, மே 28—

'சிங்களத்தை மட்டுமே இலங்கையின் அரசு மொழியாக பிரகடனப்படுத்துவது என்ற பண்டார நாயகா சர்க்காரின் முடிவை எதிர்த்து இலங்கை வாழ் தமிழ் மக்கள் அறப்போர் நடத்துவர்' என்று, பெடரல் கட்சி அறிவித்திருக்கிறது.

வரும் ஜூன் 5-ந் தேதி முதல் இந்தச் 'சத்தியாக்கிரக'த்தை நடத்துவதென கட்சியின் செயற்குழு, யாழ்ப்பாணத்தில் கூடிய போது முடிவெடுத்திருக்கிறது.

அன்றுதான், சிங்களத்தை மட்டும் அரசாங்க மொழியாக்கும் மசோதா மக்கள் சபையில் தாக்கலாகவிருக்கிறது.

தமிழ் மக்கள் சிங்களத்தைக் கற்றுக் கொள்ளக்கூடாது என்றும், தங்களுடைய அலுவல்களுக்கு ஸ்தலஸ்தாபனங்கள் சிங்களத்தை உபயோகிக்கக்கூடாது என்றும் கேட்டுக்கொள்வது எனவும், கட்சிச் செயற் குழு தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ளது.

எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையில் உள்ள இந்த பெடரல் கட்சிதான், தனியொரு கட்சி என்ற முறையில், 14 உறுப்பினர்களுடன் கூடிய பெரிய எதிர்க் கட்சியாகும்.

இந்தக் கட்சியினர், சுவிட்சர்லாந்துபோல, தமிழ்ப் பிரதேசங்களுக்கு முழுச் சுதந்திரத்துடன் கூடிய ஒரு பெடரல் ஆட்சிமுறை இலங்கைக்கு வேண்டும் என்பதை இலட்சியமாகக் கொண்டவர்கள்.

வாழ்க்கை நிலை, தாங்கிக்கொள்ள இயலாதிருப்பதை ஒப்புகிறாராம்

ஆனால், அந்த நிலையைப் போக்க கொடிய நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடாதாம்

கரக்பூர் சம்பவம் குறித்து பண்டித நேரு

"இந்தியாவின் பல பகுதிகளில் வாழ்க்கை நிலைமை தாங்கிக் கொள்ள முடியாததாக இருக்கிறது என்பதை நான் உறுதியாக ஒப்புக் கொள்ளுகிறேன். அந்த நிலைமைக்கு ஆளாக்கப் பட்டால் நான் எவ்வாறு நடந்து கொள்ளுவேன் என்பதை நிச்சயமாக என்னால் சொல்ல முடியாது.

"அங்கு வாழ்க்கை நிலைமை சகித்துக் கொள்ள முடியாததாக இருக்கிறது என்பதற்காக, அவைகளைப் போக்க தவறான செயல்களையும், கொடிய நடவடிக்கைகளையும் மேற்கொள்ளலாம் எனக் கருதிவிடக் கூடாது. அச்செயல்களை மேற்கொள்ளுபவர்கள் ஒரு கும்பலானாலும், அல்லது தனி மனிதர்களானாலும், அவர்களுக்கே, அது கேடு சூழ்கிறது"

இவ்வாறு, கரக்பூரில் நடைபெற்ற புகைவண்டி கோர சம்பவத்தைக் கண்டித்து, மக்கள் சபையில் பேசிய இந்தியப்பிரதமர் குறிப்பிட்டுள்ளார்

இந்தியா முழுவதிலும் பயிரிடக்கூடிய நிலம் எவ்வளவு?

புதுடில்லி, மே 27—

'இந்தியாவில் சராசரியாக ஒவ்வொருவருக்கும், ஒரு ஏகருக்குக் குறைவான நிலமே பயிரிடக்கூடியதாக இருக்கிறது' என்று கணக்கிடப்பட்டிருக்கிறதாம்!

81 கோடி ஏகர் பரப்புடையது இந்தியா—என்று கணக்கிடப் பட்டிருப்பதாயும், இதில் உள்ள 36 கோடி மக்களுக்கு 32,40,00,000 ஏகர் மட்டுமே பயிரிடக்கூடிய நிலமாக இருப்பதாயும், மத்திய சர்க்கார் உணவிலாகாவினர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்று கூறுகிறது.

வெண்ணெய் — நெய் முதலிய பொருள்கள்

அன்பளிப்பாகப் பெறுவதை நிறுத்த வேண்டுமா?

மக்கள் சபையில் கேள்விகள்

புதுடில்லி, மே 28—

"வெண்ணெய் நெய் முதலிய பொருள்களை, அன்பளிப்பாக ஏற்றுக்கொள்ளக் கூடாது என்பது இந்தச் சபையின் கருத்தாக இருக்குமானால், சர்க்கார் அதுபற்றி யோசிக்கத் தயாராக இருக்கிறது," என்று, உணவு இலாகா உதவி மந்திரி கிருஷ்ணப்பா, மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

"இதுபோன்ற பொருள்களை கேட்டுப் பெறக்கூடாது என்பது இந்தச் சபையினுடையவும், மக்களுடையவும் கருத்து என்பதால், சர்க்கார், இவற்றைப் பெறாமல் நிறுத்திவிடுமா?" என்று கேட்கப்பட்டபோதுதான், மந்திரி மேற்கண்டவாறு பதிலிறுத்திருக்கிறார்.

"நாம் இதுபோன்ற பொருள்களை அன்பளிப்பாகப் பெறுகிறோம்; கேட்டுப் பெறுவதில்லை. நல்லெண்ணத்தின் அறிகுறியாக நாம் இங்கிருந்து பொருள்களை அனுப்புகிறோம்; அதேபோல அமெரிக்காவிலிருந்தும் பொருள்கள் நல்லெண்ண அறிகுறியாக வந்து சேர்கின்றன," என்றும் அவர் கூறியிருக்கிறார்.

சில உறுப்பினர்கள், 'இந்த அன்பளிப்புகள் மக்களுக்கு வழங்கப்படும்போது எவ்வித பாரபட்சமுமின்றி வழங்கப்படுகின்றனவா? கிறித்தவர்களுக்கு மட்டுமே இவை தரப்படுகின்றனவா? கிறித்தவர்களாக மதம் மாற்றுவதற்கு இந்தப் பொருள்களை விநியோகித்துப் பயன்படுத்துகிறார்களா?'—என்றெல்லாம் கேள்விகள் கேட்டிருக்கின்றனர்.

இதுபோன்ற புகார்கள் வந்திருப்பதாயும், அது குறித்து தாம் கவனிப்பதாயும் மந்திரி பதில் தந்திருக்கிறார்.

இந்தியாவுக்கு உதவி

'யூனிசெப்' நிறுவனம், இந்தியாவுக்கு உதவியாக 1952- ஆண்டிலிருந்து இதுவரை மொத்தம் 1,05,59,509 டாலர் அளித்திருக்கிறது.

உணவுப் பற்றுக்குறைக்கு எலிகள் காரணமாம்!

புதுடில்லி, மே 28—

உணவுப் பற்றுக்குறைக்குக் காரணம் எலிகள் என்றால், எவரேனும், ஆச்சரியப்படாமலிருக்க முடியுமா?

"மணிப்பூர் மாநிலத்தில் ஒரு வட்டத்தில் உணவுப் பற்றுக்குறை ஏற்பட்டதற்கு எலிகள்தான் காரணம்,"

என்று, மத்திய சர்க்கார் உணவு இலாகா துணை மந்திரி எம். வி. கிருஷ்ணப்பா மக்கள் சபையில் குறிப்பிட்டிருக்கிறாராம்.

கடந்த அறுவடைக்காலத்தில், இந்தவட்டத்தில், இருந்த பயிர்களை எல்லாம் எலிகள் தின்றுவிட்டதாம் வழக்கமாக சுயதேவைப் பூர்த்தியான இந்த வட்டம், உணவுப் பற்றுக்குறை பிரதேசமாக ஆகிவிட்டது என்றும் அவர் கூறியிருக்கிறார்.

கேள்விகளுக்கு பதிலளித்த அவர் மேலும், இதுவரை 540 மணங்கு நெல் அந்தப் பிரதேசத்தில் விமானம் மூலம் போடப்பட்டிருக்கிறது என்றும், வேறு போக்குவரத்துச் சாதனம் இல்லாததால், மக்கள், [illegible] அரிசி எடுத்துச் செல்ல[illegible] எவ்வளவு அரிசி வேண்டு[illegible] தரத் தயார் என்றும் [illegible] கிறார்.

நம் நாடு
தி.மு.கழகத்தின் இதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்
சென்னை 29—5—'56 செவ்வாய்

மங்களகரமான ஆரம்பம்!

திரிசிரபுரத்தில் நடைபெற்ற நமது கழக மாநாட்டில் இரண்டு இலட்சத்திற்கு அதிகமான மக்கள் கூடினர்.

மாநாட்டில் கூடி இருந்த நான்கில் ஒரு பங்கினர் மகளிர் ஆவர்.

இதுபற்றிய சிறு விளக்கமும் தரவில்லை தேசீய ஏடுகள்!

மாநாட்டு வெளிப்புற நுழைவு வாயில் கண்ணையும், கருத்தையும் கவரும வகையில், கம்பீரமாகக் காட்சி தந்தது.

உட்புற நுழைவு வாயிலும், தென்னங்கீற்றால் ஆக்கியவரின் கைவண்ணத்தையும், கருத்து வளத்தையும் மெய்ப்பிக்கும் வகையில் அமைந்திருந்தது.

இதுபற்றியும், இருட்டடிப்புச் செய்து விட்டன தேசீய ஏடுகள்,

இரவிலும், கதிரவனைக் கொண்டுவந்து மேடைமீது இருத்தி பந்தலை ஒளி பெறச் செய்தது போன்று, மாநாட்டுப் பந்தலில் ஒளி அலங்காரம் செய்திருந்தது பெரும் அற்புதம்.

அது பற்றியும், ஒரு வரி எழுதும் பெருங்குணம் தேசீய ஏடுகளுக்கு ஏற்படவில்லை.

நான்கு நாட்களிலும், கழகத்தவர்கள் தந்த கருத்துரை, தலைவர் தீட்டிக் காட்டிய திராவிட நாட்டின் சித்திரம், நிறைவேற்றிய தீர்மானங்கள், உருவாக்கிய புதிய முடிவு, இவை நிகழ்ந்த போது மக்கள் காட்டிய பேரார்வம் ஆகிய எது பற்றியும், பொது மக்களுக்குச் செய்தி தருவது என்ற நோக்கத்திலிருந்துகூட உண்மையைப் பிரசுரிக்க தேசீய ஏடுகளுக்கு நியாயபுத்தி இல்லை.

ஆனால் எப்பொழுதும் போலவே, இல்லாததை தம் மிச்சையாக இட்டுக்கட்டிக் கூறியும் ஒதுக்கித் தள்ள வேண்டிய அற்ப விஷயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து எழுதியும்வரும் ஈனச் செயலை மட்டும், தேசீய ஏடுகள், இப்பொழுதும் செய்திருக்கின்றன.

அதாவது, திருவரங்கம் கோயிலிலும், திருச்சி மலைப் பிள்ளையார் கோயிலிலும் பாதரட்சை அணிந்த கால்களுடன், கழக உறுப்பினர்கள், அல்லது அனுதாபிகள் என்று சொல்லப்படும் சிலர் சென்றனர். கோயில் அதிகாரிகள் தடுத்தும் அவர்கள் அடம் பிடித்தனர். அதை முன்னிட்டு மேற்படி கோயில்களில் போலீஸ் பாதுகாப்புச் செய்யப்பட்டது. இவ்வாறு ஒரு பொய்ச் செய்தியை, சென்னை தேசீய ஏடுகள் வெளியிட்டுள்ளன.

அப்பித்தலாட்டக் கற்பனையை ஒரு பெரும் ஆதாரமாக வைத்துக்கொண்டு, நமது முன்னேற்றக் கழகத்தின் கண்ணியத்தையே தூற்றித் திரிய, மங்களகரமாக ஆரம்பித்து இருக்கிறார், தனது பொது வாழ்வில் கண்ணியம் என்பதை மறந்தும் கையாண்டறியாத கனம் முதலமைச்சர் காமராசர் அவர்கள்.

கனம் காமராசர் அவர்களின் அரசியல் நேர்மையையும், நீதியையும் தெரிந்து கொள்ள விரும்புவோர், அவர் வாழ்க்கை பற்றி புகழ்ந்து எழுதப்பட்டுள்ள ஏட்டை ஒருமுறை நோக்கினாலே போதும். கண்ணியம், நீதி, நேர்மை, வாய்மை ஆக எந்த உயர்ந்த பண்பும், அவருடைய அரசியல் நடவடிக்கைகளில் இடம் பெற்றதே கிடையாது என்ற உண்மையை, ஒவ்வொருவரும் நன்கு தெரிந்து கொள்ளுவர்.

தேனீ கொலைச் செயலுக்கு மூலத் தூண்டுகோலாக இருந்தவர் இந்த கனம்தான் என்பதை, தமிழ் நாட்டு மக்கள் இதற்குள்ளாக மறந்திருக்கவும் முடியாது.

தாம் பொதுவாழ்வில் ஈடுபட்ட நாள் முதற்கொண்டு இன்றுவரை, காங்கிரஸ் கட்சிக்குள் ஒருவர்மீது ஒருவரை ஏவிவிட்டும், ஒருவருக்கு எதிராக மற்றொருவரைத் தூண்டிவிட்டும், இருதரப்பினருக்கும் நடுநிலைமை தவறாத உத்தமர் போல் வெளிப்படையாக நடித்தும், தமிழ்நாடு காங்கிரசின் தலைமைப் பதவி தம்மை விட்டுக் கைநழுவி விடாமல் பார்த்துக் கொள்ளுவது ஒன்றையே குறியாகக்கொண்டு செயல்பட்டு வரும் இந்தக் கனவான், நமது கழகத்தவர்களுக்கு கண்ணியம் போதிக்க முந்துவது என்றால், அதைவிட நகைப்பிற்குரியது வேறு ஒன்றும் இருக்க முடியாது. நிற்க,

திருவரங்கம் கோயிலுக்குள் பாதரட்சை அணிந்து கொண்டு யாராவது போனார்களா இல்லையா என்பதே நிச்சயிக்கப்படாத ஒன்றாகும்.

அப்படி சிலர் போனார்கள் என்பது உண்மையானால், அவர்கள் கழக உறுப்பினர்களா அல்லது அனுதாபிகளா என்பதும் ஆராய்ந்து அறியப்படாத ஒன்றாகும்.

அவ்வாறு சென்றவர்கள் கழக உறுப்பினர்களாகவோ அல்லது அனுதாபிகளாகவோ உள்ளவர்கள்தான் என விவாதத்திற்காக ஒப்புக் கொள்வதானாலும், அவர்களை அவ்வாறு நடந்து செல்லக்கூடாது எனத் தடுத்து நிறுத்துவதற்கு கோயில் அதிகாரிகள் எத்தகைய முயற்சியை எடுத்துக் கொண்டனர் என்பதும் தெரியவில்லை.

அவ்வாறு பாதரட்சை அணிந்து கோயிலுக்குள் செல்லக்கூடாது என கோயில் அதிகாரிகள் தடுத்தும், சிலர் மீறி கோயிலுக்குள் செல்ல பிடிவாதம் காட்டினர் என்றால், அவர்கள் அனைவரையும் போலீஸ் அதிகாரிகளிடம் ஒப்படைக்க கோயில் அதிகாரிகள் முயற்சித்தனரா இல்லையா என்பதும் விளக்கமாகத் தெரியவில்லை.

இவ்வளவு ஆராய்ச்சிக்குப் பிறகு முடிவு கட்ட வேண்டிய ஒரு விவகாரத்தை, தங்கள் பிறவிக் குணத்துக்கொப்ப பத்திரிகை நிருபர்கள், பாதரட்சை அணிந்து கோயிலுக்குப்போக முயன்றவர்கள் கழக உறுப்பினர்களாகவோ அனுதாபிகளாகவோதான் இருக்க வேண்டும் என நம்பப்படுகிறது என்று செய்தி தயாரித்துவிட்டிருக்கிறார்கள்.

அந்தச் செய்தியில் உண்மை இருக்குமா இல்லையா என்பதை ஆழச் சிந்தித்து செய்தியை பிரசுரிக்க வேண்டிய பொறுப்பில் உள்ள ஆசிரியர்களோ, மனு வழி வந்த மகானுபாவர்களாதலால், செய்தி கிடைத்ததே போதுமென்ற திருப்தியில், அதை உடனே வெளியிட்டும் விட்டனர்.

அந்தப் பித்தலாட்டச் செய்தி நமது தேசீய பத்திரிகாலயங்களையே பிரசவ விடுதிகளாகக் கொண்டிருந்தாலும் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை

பத்திரிகை நிருபர்களும், ஆசிரியர்களும்தான் அப்பித்தலாட்டச் செய்திக்கு முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டார்கள் என்றாலும், அந்தச் செய்தி உண்மையாக இருக்குமா இருக்காதா என்று ஆராய்ந்து பார்த்து முடிவுகட்டுவதையல்லவோ முதலமைச்சர் மேற்கொண்டு இருக்க வேண்டும். முன்னேற்றக் கழகத்தைத் தாக்க, ஒரு வாய்ப்பு கிடைத்து விட்டதே என்ற நினைப்பில், அவரும் அதை நம்பி நம்மீது வசைபாடத் தொடங்கி விட்டார்.

முதலமைச்சர் காமராசர் காலஞ் சென்ற சத்தியமூர்த்தி அய்யரின் அரசியல் வாரிசு என்று சொல்வது வழக்கம். காலஞ் சென்ற அய்யரின் அந்தக் கால அரசியல் பித்தலாட்டத்தை அறிந்திருப்பவர்கள், அவருடைய வாரிசாக வளர்ந்துள்ள காமராசர் இழிசெயல் கண்டு ஆச்சரியப்பட மாட்டார்கள். சபாஷ்! குருவிற்கேற்ற சீடர் என்றுதான் எண்ணிக் கொள்ளுவார்கள்!

அந்தக்காலத்தில், அரசியல் கைதியான காங்கிரஸ் பெண்மணி ஒருவரை, சிறை விதிகளின்படி, அவர் கழுத்தில் அணிந்திருந்தத் தாலியைக் கழட்டும்படி, ஒரு வெள்ளை சிறை அதிகாரி உத்தரவிட்டார். அந்த உத்தரவை ஒரு புகலாக வைத்துக்கொண்டு, 'தாலி அறுத்த முதலியாருக்கா உங்கள் ஓட்டு' என்று, தேர்தலில் கலந்து கொண்ட சர். ஏ. இராமசாமிக்கு எதிராக காலஞ்சென்ற சத்தியமூர்த்தி அய்யர் வெளுத்து வாங்கினார். அத்தேர்தலுக்கு சில மாதங்களுக்கு முன்புதான் 'தினமணி' துவங்கப்பட்டது, 'தாலி அறுத்த முதலியாருக்கா உங்கள் ஓட்டு?' என்ற சத்தியமூர்த்தி அய்யரின் தேர்தல் தாரகத்தை, அந்த ஏடும் கொட்டை கொட்டை எழுத்துக்களில் தினம் தினம் பிரசுரித்து வந்தன.

எனவே, காலஞ்சென்ற அய்யரின் அரசியல் வாரிசாகவிளங்கும் முதலமைச்சரும், அவருடைய பங்காக, 'கழகத்தினர் பாதரட்சை அணிந்த கால்களுடன் கோயிலுக்குச் சென்றார்கள்; அவர்களுக்கா நீங்கள் வாக்களிக்கப் போகிறீர்கள்?' எனக் கேட்கத் துவங்கி இருக்கிறார். மங்களகரமான ஆரம்பம்!

தேர்தல் நாள் நெருங்க நெருங்க, முதலமைச்சர், தமது ஜன்ம குணப்படி, நமது முன்னேற்றக் கழகத்தின்மீது எவ்வளவோ அபாண்டங்களை கூற இருக்கிறார் என்பதற்கு, இந்தப் பாதரட்சை விவகாரம் ஒரு முன்மாதிரி — எச்சரிக்கையாகும். முதலமைச்சரின் அரசியல் கயமை எந்த அளவு செல்லக்கூடும் என்பதை விளக்கமாகத் தெரிந்திருக்கும் நிலையில்தான், நமது கழகம் தேர்தலை எதிர்நோக்கி இருக்கிறது என்பதை, இந்த 'அறத்தின் நீங்கிய அரக்கர்' நிலையில் நடந்து கொண்டுவரும் முதலமைச்சர் உணர்ந்துகொள்ள வேண்டும். தாம் நடத்திய தேனீயை இனியும் நாட்டில் தலைகாட்ட திராவிடப் பெருங்குடி மக்கள் விடமாட்டார்கள் என்பதை, இப்பொழுதே முதலமைச்சர் உணர்ந்து, தேர்தலில் வேறு நியாயமான பிரச்சார முறையைக் கண்டறிய முயற்சிக்க வேண்டுகிறோம்.

பாதரட்சை அணிந்து திருவரங்கம் கோயிலுக்குள் சென்றவர்கள் காங்கிரஸ் கட்சியினரேயாவர்—அதுவும், காங்கிரசிலுள்ள காமராசர் அவர்களின் எடுபிடிகளாவர்! அதிலும் காமராசர் கட்டளைப்படியே பாதரட்சை அணிந்து அவர்கள் கோயிலுக்குள் சென்றிருக்கின்றனர்!

இந்த உண்மையைத்தான் அறிந்தோ அறியாமலோ தேசீய ஏடுகளின் நிருபர்கள், ஒரேமுகமாக பாதரட்சை அணிந்து சென்றவர்கள் கழகத்தவர் அல்லது கழக அனுதாபிகள் எனக் கதை கட்டி விட்டிருக்கின்றனர்!

தாங்களே முன்வந்து ஒரு அக்கிரமத்தைச் செய்துவிட்டு, அதை எதிர்க்கட்சிமீது சுமத்தி, அக்கட்சியைப் பழிவாங்க முயலும் பாசீசப் பண்பை, இந்திய பாசீச வெறியர்களான காமராசர் கோஷ்டியினர் கையாள முன்வந்துள்ளனர்.

அவர்கள் தேர்தல் பிரச்சார முறையில், இவ்விழிமுறையும் ஒன்றாகும். இந்த மங்களகரமான ஆரம்பத்தை, அமங்களகரமாக்க வேண்டியது, திராவிடப் பெருங்குடி மக்களின் நீங்காக் கடமையாகும்.

'ஆஸ்தீகர் அனைவரும் பக்திமான்களல்லர்'

'நாஸ்தீகரும் பக்திமான்களே!'

நாஸ்தீகர் குறித்து விநோபா பாவே புதிய விளக்கம்

காஞ்சிபுரம், மே 27—

"இந்த நாட்டில் ஒரு பகுதி மக்கள், கடவுளை நம்புவதில்லை என்று என்னிடம் கூறப்பட்டது. கடவுளை நம்பாத தன்மை, இந்த நாட்டின் இந்தப் பகுதிக்கு மட்டுமோ அல்லது நாட்டுக்கு மட்டுமோ உரியது அல்ல; இது போன்ற நாஸ்தீக இயக்கங்களை உலகம் முழுவதும் அறிந்தே இருக்கின்றது,"

என்று விநோபா பாவே அவர்கள், காஞ்சி சர்வோதய சம்மேளனத்தில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

அவர் மேலும் சொன்னார்:—

"காலம் காலமாய், மக்களில் ஒரு சாரார், 'கடவுள் உண்மைதானா?' என்று கேட்டுத்தான் வந்திருக்கின்றனர். இது குறித்து நாம் கவலைப்படத் தேவை இல்லை என்று நான் எண்ணுகிறேன் அவர்கள், 'கடவுல் இல்லை' என்று கூறலாம்; ஆனால், கடவுள், 'அவர்கள் இல்லை' என்று உதறிவிட மாட்டார். களைக் கடவுள் மறந்துவிடும்போதுதான், நாம் கவலைப்படவேண்டும் ஒரு குழந்தை தாய் வேண்டாமென்று கூறினால், அது கவலைக்குரியது அல்ல; ஆனால் ஒரு தாய் குழந்தையை மறந்துவிடும்போதுதான் நாம் கவலைப்படவேண்டும்.

"அன்பும் மனிதாபிமானமும் வேண்டும் என்று, கடவுளே இல்லை என்பவர்கள் கூறுவார்களேயானால், நாம் கவலைப்படத் தேவை இல்லை. மனிதாபிமானம் என்பது, கடவுள் என்பதற்கான வேறொரு சொல்தான்; வெறும் வார்த்தைதான் வேறு; மனிதாபிமான ஒருமைப்பாட்டில் நம்பிக்கை கொண்டால், கடவுள் நம்பிக்கை கொண்டிருப்பதாகவே பொருள்படும்

"சில பக்தர்களை நாம் சைவர்கள் என்றும், வைஷ்ணவர்கள் என்றும் அழைப்பதில்லையா? அது போலத்தான் 'நாஸ்தீக பக்தர்கள்' என்று அவர்களை நாம் அழைப்போம். பக்தர்கள், ஆண்டவனை 'சிவன், விஷ்ணு' என்று அழைக்கிறார்கள் என்றால், நாஸ்தீகர்கள், 'பூஜ்யம்' என்று அழைக்கிறார்கள் இதுகூட, ஆண்டவனை வழிபடும் மற்றொரு வழி என்று நான் கருதுகிறேன்.

"சர்வோதய இலட்சியங்களை ஆதரிப்பவர்கள், கடவுள் நம்பிக்கை கொண்டவர்களாக இருக்கவேண்டும் என்பது நியதி அல்லவா?— என்று என்னைச் சிலர் கேட்கிறார்கள்.

"நான் கூறுவதெல்லாம், சர்வோதய இலட்சியத்தை ஆதரிப்பவர்கள், அன்பு, மனிதாபிமானம், சமுதாய உரிமை இவற்றில் நம்பிக்கை கொண்டவர்களாக இருக்க வேண்டுமென்பதே!

'எல்லா ஆஸ்திகர்களும் பக்தர்கள் அல்ல!

"சொத்துரிமை கொண்டாடுகிற ஒவ்வொருவரையும், நான், கடவுளின் விரோதி எனவே கருதுகிறேன். 'ஈசுவரன்' என்றால், உலக முழுவதற்குமான கடவுள்— தேவன் என்பது பொருளல்லவா?

'ஒவ்வொரு தனி மனிதரின் அடிப்படை மனிதாபிமானத்தையே, சர்வோதயம், அங்கீகரிக்கிறது."

அம்பர் சர்க்கா!

'தென்னாட்டின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக அமையும்'

"அம்பர் சர்க்கா, ஆலைகளின் விரிவாக்கத்திற்குக் குறுக்கே நிற்கக்கூடாது; அப்படி குறுக்கே நிற்குமானால், அது தென்னாடு, பஞ்சாப் பகுதிகளின்முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக அமையும். நான் கூறுவதெல்லாம் பஞ்சாபிலோ, தென்னாட்டிலோ ஆலைகள் வளருவதைத் தடுக்கக் கூடாது என்பதுதான்; மேலும், அங்கெல்லாம ஆலைகளைத் துவக்குவதில்தான் பிராந்தியத் தொழில்வளர்ச்சி அடங்கி இருக்கிறது"

என்று, டாக்டர் ஏ கிருஷ்ணசாமி மக்கள் சபையில் பேசியபோது குறிப்பிட்டிருக்கிறார்.

1,400 பேர்களாம்!

இந்திய ஆயுள் 'இன்ஷ்யூரன்ஸ்' தொழிலில், 1956 மார்ச் திங்கள் முதல் தேதியன்று முழு நேர வேலை செய்யும் தொழிலாளர்கள் சுமார் 1,400 பேரும் இருந்தனர் என்றும் 'ரெவினியூ—சிவில்' செலவின அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

இந்தியா சென்ற ஆண்டில், பர்மா, இலங்கை, ஈரான், மலேயா, நைஜீரியா, நேப்பாளம், சவூதி அரேபியா, தாய்லாந்து, அமெரிக்கா ஆகிய ஒன்பது நாடுகளுக்கு மொத்தம் ரூ. 60,650 ரூபாய் பெறுமானமுள்ள பாம்பு விஷக்கடி எதிர்ப்பு மருந்தை ஏற்றுமதி செய்துள்ளது.

பாவம்! ஆச்சாரியார்!

'ஐயோ! பக்தி ஒழிந்துவிட்டதே— நாஸ்தீகம் பரவி விட்டதே!'

'தென்னாட்டிற்குப் பெரிய சாபத்தீடல்லவா?'

'அரக்கர்களைஒழிக்கஉதவமாட்டீரா?'

விநோபா பாவேயிடம் ஆச்சாரியார் ஓலம்!

"ஐயோ! நாஸ்திகம், வேகமாக வளருகிறதே! தென்னாட்டிலிருந்து முளைத்து, கிளைத்து, படர்ந்து நாடுமுழுவதும் பரவிவிடும் போலிருக்கிறதே! எதிர்த்துப் பார்த்தோம்; வீரம் பேசினோம்; ஆற்றல் முழுவதையும் திரட்டிப் பார்த்தோம்; அழிக்கமுடியவில்லையே! என் செய்வோம்! தேவனே, இந்த இராட்சசர்களை ஒழிக்க உன்னால்தான் முடியும்போல் தோன்றுகிறது; அருள்புரிய மாட்டாயா? கருணை வழங்கமாட்டாயா? பக்தி பழிக்கப்படுகிறது! அழிக்கப்படுகிறது!—என்று ஓலமிட்டிருக்கிறார், அன்பர் ஆச்சாரியார்—முறையிட்டிருக்கிறார், விநோபா பாவேயிடம்!

காஞ்சியில் நடைபெறும் 'சர்வோதய சம்மேளன'த்தில் பேசுகையில் அவர் குறிப்பிட்டிருப்பவை, திராவிட முன்னேற்றக் கழகத்தை ஒழிக்க அவரது 'கோஷ்டி'யால் இயலவில்லை என்ற கையாலாகாத்தனத்தையும், தி. மு. கழகத்தவரை அரக்கர்கள்—இராட்சதர்கள் என்று கூறி, அவர்களை நாஸ்தீகவாதிகள் என்று பழித்துரைத்து, மகிழ்ந்து 'இலாபம்' பெற நினைக்கும் கெடுமதியையும் வெட்டவெளிச்சமாக்கிக் கொண்டிருக்கின்றன.

"பக்தி இன்றேல் நாடு பாழாகிவிடாதா? காந்தியாரும், விநோபா பாவேயும், பக்திமிக்கவர் அல்லவா? பக்திமானாயிருந்தால், எவ்வளவு ஆற்றல் கொண்டவராக விளங்கலாம் என்பதற்கு அவர்கள் இருவரின் வாழ்க்கைகளும் எடுத்துக் காட்டல்லவா?

"அந்தப் பக்தியைத்தான் ஒழித்துக் கட்டவேண்டும் என்கிற இயக்கம், தென்னாட்டில் வேர்விட்டு வளர்ந்தோங்கியிருக்கிறது.

"இந்தச் சம்மேளனத்தின் நடவடிக்கைகளே, பக்தியை மையமாக்கிக்கொண்டவைதானே!

"இந்தச் சம்மேளனம் நடைபெறும் காஞ்சியே, சிறந்ததொரு வைஷ்ணவ, சைவ புண்ணிய ஸ்தலமாயிற்றே! இதே காஞ்சிதான், அந்த நாஸ்தீக இயக்கத்தின் கோட்டையாகவும் விளங்குகிறது. என் செய்வது? சைவ, வைஷ்ணவத்தின் ஊற்றுக்காலான காஞ்சியிலேயே இராட்சசர்களும் தோன்றியிருக்கிறார்கள்.

"நான் இதை வலியுறுத்திக் கூறுவது, விநோபாபாவே அவர்களுக்கு ஆச்சரியமாயிருக்கலாம்; அவர், மக்களின் தெய்வீக பக்தி குறித்து சந்தேகம் கொள்ளாதவராயுமிருக்கலாம்; ஆனால், அவர் வடநாட்டிலிருந்து வந்திருப்பவர். தென்னாட்டின் நிலைகளைத் தெரிந்து கொள்ளாதிருக்கலாம்.

"தென்னாட்டில், நாஸ்தீகம் வேகமாகப் பரவிக்கொண்டு வருகிறது. கடவுள்மீது கொண்டுள்ள நம்பிக்கையைக் கைவிட்டால் ஏழைகள் சுகமாக வாழமுடியும் என்று தினந்தோறும் பிரச்சாரம் செய்யப்பட்டு வருகிறது. இந்த இயக்கம் எப்போதும் என்னைக் குழப்பியே வருகிறது. எனக்குத்திகைப்பையே தருகிறது; இதன் ஊற்றுக்கால் எது என்பது எனக்குத் தெரியவில்லை. எனவே, இது நமக்குத் தரப்பட்டிருக்கும் ஒரு 'சாபத்தீடு' என்றே நான் கருதுகிறேன். உலகத்திற்கு, சங்கரர், இராமானுசர் ஆகியோரைதந்ததாய் நாம் கொண்டிருந்த கர்வத்திற்கு தண்டனையாகவே இந்தச் சாபத்தீடு அமைந்திருக்கிறது போலும்! சாபத்தீடு என்னவென்றால், இந்த நாஸ்தீகம் தென்னாட்டில் துவங்கி, இந்தியாவின் இதர பாகங்களுக்கும் பரவ வேண்டும் என்பதுதான்.

"இந்தச் சூழ்நிலையில், இந்தச் சாபத்தீட்டைப் போக்குவதற்காகவே வருவதுபோல, விநோபா பாவே இங்கு வந்திருக்கிறார்—அகல்யாவின் சாபத்தீட்டை, இராமர் போக்கியதுபோல, விநோபா பாவேயும் தென்னாட்டின் சாபத்தீட்டைப் போக்க வேண்டும்.

"மக்கள், விநோபாபாவேயை மதிக்கிறார்கள்; இங்குள்ள அந்த இராட்சசர்கள்கூட மதிக்கிறார்கள்; நான் அவர்களை இராட்சசர்கள், அரக்கர்கள் என்று அழைப்பது கண்டு எவரும் ஆச்சரியப்படவேண்டாம்; அவர்களே அதை ஒப்புகிறார்கள்; தங்களை, 'இராவணன் பரம்பரை' என்கிறார்கள்; அவர்கள், இராமனை தங்கள் விரோதி—பகைவன் எனக் கருதுகிறார்கள்; விநோபாபாவேயின் வருகை, இந்தச் சாபத்தைப் போக்கட்டும்; காஞ்சீபுரம், இந்தச் சோதனைக்கு ஏற்றதொரு இடமாகும்."—என்றெல்லாம், ஆச்சாரியார் அழுது புலம்பியிருக்கிறார்; ஓலமிட்டிருக்கிறார். பாவம்! ஆச்சாரியார்!

900 நகரங்களில் கட்டாயக் கல்வி

அமுலாகிறதென அறிவிப்பு

1953—54-ம் ஆண்டில் மொத்தம் 16 மாநிலங்களில், சில பகுதிகளில் கட்டாய ஆரம்பக் கல்வி அமுல் நடத்தப்பட்டு வந்ததென்றும், அதே கால அளவில் நாட்டில் மொத்தம் 900 நகரங்களிலும், 35,570 கிராமங்களிலும் கட்டாய ஆரம்பக் கல்வி அமுல் நடத்தப்பட்டு வந்ததென்றும், மக்கள்சபையில் மத்திய சர்க்கார் கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

புதுடில்லி, மே 25—

1950—55 கால அளவில் மொத்தம் 14,177 மாணவர்கள் 'எஞ்ஜினீயரிங்' பட்டத் தேர்வு அல்லது அதற்குச் சமதையான தேர்வில் தேறினார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நடவடிக்கை எடுக்கத் தயங்க மாட்டார்களாம்!

"பதுக்கி வைப்பது, சூதாட்ட பேரத்தில் ஈடுபடுவது போன்ற சமூக நலனுக்கு விரோதமான நடவடிக்கைகளில் ஈடுபடுகிற மிகப் பெரும் வணிகர்களை எதிர்த்து தக்க நடவடிக்கை எடுக்கப் போதிய அதிகாரங்கள் அரசியலாரிடம்உள்ளது. இவைகளைப் பயன்படுத்த அரசாங்கம் தயங்காது,"

என்று, இந்திய உணவு, விவசாயத் துறை அமைச்சர் கூறியுள்ளார்.

"வணிகர்கள் உணவு தானியங்களை பதுக்கிவைத்து, சூதாட்ட பேரத்தில் ஈடுபட்டு வருகிறார்களென்று நம்புவதற்கு அரசினருக்கு காரணங்கள் இருக்கிறது. உணவுப் பண்டங்களின் விலைகள் அண்மையில் உயர்ந்ததற்கும் இதுவும் ஒரு காரணமாகும்," என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

'கல்வி முறையில் குறைபாடு எதுவும் கிடையாது'

'ஆசிரியர்-மாணவர் தொடர்பற்றுப் போனதே உள்ள குறை'

டாக்டர் சி. பி. இராமசாமி அவர்கள் கருத்து

இந்தூர், மே 24—

"இன்றைய கல்விமுறையில் அடிப்படையான கோளாறு எதுவும் கிடையவே கிடையாது"

"இன்றைய கல்விமுறையை அறவே கைவிட்டுவிட வேண்டுமென்ற கருத்துக்கு நான் முழுதும் மாறுபட்டக் கருத்துக் கொண்டிருப்பவன்"

இவ்வாறு டாக்டர் சி. பி. இராமசாமி அய்யர் அவர்கள் அறிவித்துள்ளார்.

இங்கு ஒய். எம். சி. ஏ. சார்பில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசும்பொழுது அவர், 'சுரேந்திரநாத் பானர்ஜி, கோகலே, மகாத்மா காந்தி, நேரு போன்றவர்களை உருவாக்குவதற்கு முக்கியப் பொறுப்பாக இருந்த இந்தக் கல்வி முறையை எவ்வாறு நாம் கைவிட்டுவிடுவது? ஆனால், ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இருக்க வேண்டிய நெருங்கிய தொடர்பு அற்றுப்போய் கிடப்பதுதான், உள்ள குறைபாடு ஆகும். மதிப்பிடத்தகுந்தவர் ஆசிரியர் என்பது ஒழிந்துபோய் இருக்கிறது."

"மாணவர்களின் உடல் வலிமையை உருவாக்குவதுதான் முதற்பணி என்பது உணரப்படாதவரையில், எந்தக் கல்வி முறையும் உருப்படப் போவது கிடையாது"

பிரிட்டனின் முதல் நீர்வளிக் குண்டு!

லண்டன், மே 24—

அடுத்த ஆண்டில், கிறிஸ்துமஸ் தீவில், பிரிட்டனின் முதல் நீர்வளிக்குண்டு வெடிக்க வைக்கப்பட்டு பரிசோதனை செய்யப்படுமென செய்தி ஒன்று கூறுகிறது.

பல்கலைக் கழகத்தில்!

டில்லியிலுள்ள பல்கலைக் கழகத்தில் பௌத்த மத போதனை இலாகா ஒன்று துவக்கப்படுமென்று குடியரசுத் தலைவர் இராசேந்திர பிரசாத் தெரிவித்திருக்கிறார்.

பக்தியைப் பரப்ப குறுக்கு வழி!

சமயாசாரியர் வரலாற்றைப் பள்ளிகளில் போதிக்கவேண்டுமாம்!

சென்னை நீதிபதியின் யோசனை!

சீர்காழி, மே 25—

"பக்தி முறையைப் பரப்ப இரண்டு வகைகளில் முயற்சிக்க வேண்டும். சைவ சித்தாந்தக் கருத்துக்களை பாடபுத்தகங்களில் சேர்க்கவேண்டும், சமயக் குரவர்கள் வாழ்க்கை வரலாற்றையும், புராணக் கதைகளையும் பள்ளிச் சிறுவர்கள் கற்கச் செய்ய வேண்டும். இரண்டாவதாக கவனிப்பாரற்றுக் கைவிடப்பட்டுக் கிடக்கும் சிற்றூர் கோயில்களில் பூஜை நடக்க ஏற்பாடு செய்தால், கிராம மக்களிடை புதிய பக்தி வெள்ளம் பெருக்கெடுக்க முடியும்"

இவ்வாறு சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி டபிள்யூ. எஸ். கிருஷ்ணசாமி அவர்கள், தர்மபுர ஆதீன சார்பில் நடைபெற்ற தமிழ் விழாவில் குறிப்பிட்டுள்ளார்.

நீதிபதி நம்புவதுபோல் பள்ளிச் சிறுவர்களுக்கு பக்தி ஏற்படக்கூடும். ஆனால் நீதி—நேர்மை — உண்மை பேசல்—திருடாமைபோன்ற பண்பாடுகளை அச்சிறுவர்கள் எவ்வாறு பெறுவர் என்பது நீதிபதியின் யோசனையில் இடம்பெறக் காணோம்!

செய்திச் சுருள்

★

பம்பாய் தமிழ் சங்கக் கட்டடத் திறப்பு விழா

பம்பாய் தமிழ்ச் சங்கத்திற்கென சுமார் ரூ 2½-இலட்சம் செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய கட்டடத்தின் திறப்பு விழா வருகின்ற ஜூன் 2-ந் தேதி மாலை 6-மணிக்கு நடைபெறவிருக்கின்றது. தமிழர்களுக்கே பெருமை தரும் வகையில் தலைநிமிர்ந்து நிற்கும் மணிமண்டபத்தை சென்னை முதலமைச்சர் கே. காமராசர் திறந்துவைக்கிறார். பம்பாய் கவர்னர் அரேகிருஷ்ண மேதாப் விழாவிற்குத் தலைமை தாங்க இசைந்துள்ளார். சென்னை அமைச்சர்கள் சி. சுப்பிரமணியம், எம். பக்தவத்சலம் ஆகியோரும் விழாவில் கலந்து கொள்ளுகின்றனர்.

பம்பாய்த் தமிழர்களின் நீண்டநாள் கனவு நனவாகும் தினத்தை கோலாகலமாகக் கொண்டாட, 'அகத்தியர் முதல் பாரதி வரை' தமிழகத்தின் வளர்ச்சியை இசை-நாடகத்தில் காண்பிக்கவும், நடனம், இன்னிசை, கவியரங்கம் முதலிய பல நிகழ்ச்சிகளும் ஜூன் 2, 3-ந் தேதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. தமிழ் கூறும் நல்லுலகத்தில் உள்ள தமிழன்பர்கள் அனைவரையும் இவ்விழாவில் கலந்துகொள்ள வேண்டுகின்றனர் பம்பாய்த் தமிழ்ச் சங்கத்தார்.

இலங்கை இலக்கியமன்றம்

19-5-56 மாலை 5 மணியளவில் இலங்கை இலக்கிய மன்றச் சார்பில், தோழர் ஏ எஸ் மணவைத் தம்பி தலைமையில். இலங்கைப் பாராளுமன்ற தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களான தோழர்கள் சி. வன்னியசிங்கம், செ. இராசதுரை, ஏ. அமிர்தலிங்கம் ஆகியோருக்கு வரவேற்பளிக்கப்பட்டது. தோழர்கள் மு. க. இராசன், பி. எஸ். ஏ. கனி, ஆர். டபுள்யூ. வி அரியநாயகம், எம். முக்தார், வி. எஸ். முருகன் இரா. அதி. மணி ஆகியோர் பாராட்டுரை வழங்கினர். 'கடலால் பிரிக்கப்பட்டிருந்தாலும், நாம் எல்லோரும் ஒரே இனம் என்ற முறையில் ஒன்று சேர்ந்து, நமது உரிமைக்காகப் போராட வேண்டும்' என்று, தோழர் வன்னியசிங்கம் குறிப்பிட்டார்.

பகுத்தறிவுப் பிரச்சாரம்

27—5—56 இரவு 7-30 மணியளவில் ஆரணி (பொன்னேரி வட்டம்) மேலண்டை தெருவில், தோழர் ஆறுமுகம் தலைமையில் பகுத்தறிவுப் பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் கா பழனி, கு பாண்டியன், கா. நெடுமாறன், சா. ஏசுபாதம், கோ. வெற்றிவீரன் ஆகியோர் தி. மு. கழகக் கொள்கைகளை விளக்கிச் சொற்பொழிவாற்றினர்.

கமர்ஷியல் தொழிலாளர் குறைகள்

22-5-56-ல் சென்னை—சால்ட் குவார்டர்ஸ் இரயில்வே மைதானத்தில், தென்பகுதி இரயில்வே தொழிலாளர் யூனியன் ஒபன்லைன் கிளை ஆதரவில், தோழர் எம். தியாகராசன் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் கே. இராமச்சந்திரன், டி. வி. ஆனந்தம், எஸ் பக்தவத்சலு, டி. ஆர். குப்புசாமி, எம். டி. கண்ணன், இராகவானந்தம், நாராணன் (அய்யர்), கே. டி. இராமசாமி, கே. என். எஸ். மூர்த்தி, இராமகோட்டி ஆகியோர் தொழிலாளர்கள் நலனில் அதிகாரிகள் அக்கறை செலுத்தாமல் இருப்பதைக் குறிப்பிட்டுப் பேசினர்.

பின்னர், வேலைநிறுத்த வாக்கெடுப்பு நடத்த மத்திய நிர்வாகக் கவுன்சிலில் செய்துள்ள தீர்மானத்தை ஆதரித்தும், அதிக நேர வேலைத் திட்டத்தையும், துரிதப் போக்குவரத்து திட்டத்தை சால்ட் குவார்டர்சில் புகுத்தியும்கூட அதற்குத் தகுந்தாற்போல் அதிகப்படி ஆட்கள் கொடுக்காமல் இருப்பதைக் கண்டித்தும், மற்றும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சிவகாசியில் 'மணி மகுடம்' நாடகம்

23-5-56-ல், சிவகாசி ஸ்ரீலட்சுமி டாக்கீசில், இலட்சிய நடிகர் தோழர் எஸ். எஸ். இராசேந்திரன் குழுவினரின் 'மணிமகுடம்' நாடகம் நடைபெற்றது.

நாடகத்தை சிறப்புற நடத்திய தோழர் இராசேந்திரனுக்கு சிவகாசி தி. மு. கழகச் சார்பிலும், நகரசபை உறுப்பினரும், கழகத் தோழருமான தோழர் ஏ. சுப்பையா அவர்களாலும் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

பாராட்டுதலுக்குத் தோழர் இராசேந்திரன் நன்றிகூறிப் பேசினார்.

சபாநாயகர் மாணவர் இல்லம்

சென்னை, மே 28—

சபாநாயகர் சிவசண்முகம் (பிள்ளை) மாணவர் இல்லத்தில் உணவு—உறைவிடம் பெற்று உயர்தரப்பள்ளிகளிலும், தொழிற்கூடங்களிலும் பயிற்சிபெற விரும்பும் மாணவர்கள் மே 31-க்குள் இரண்டணா தபால் தலையுடன் கீழ்க்கண்ட முகவரிக்கு மனு செய்து கொள்ள வேண்டுகிறோம்.

முகவரி'—க. நாராயணசாமி செயலாளர், எண் 78, ஜி. எ. ரோடு, சென்னை—21.

திருமணம்

காஞ்சியை அடுத்த செவிலிமேட்டில் தோழர் செல்லக்குட்டி இல்லத்தில் தோழர் செல்வராஜு—தோழியர் பூ கு ண ம் ம ா ள்; தோழர் சின்னையன்—தோழியர் சுசீலா அரிசனக் குடும்பத் திருமணம் ஆசிரியர் தோழர் எம். மாணிக்கம் அவர்கள் தலைமையில் சிறப்புற நடைபெற்றது. மணமக்களை வாழ்த்தி தோழர்கள் ஞானவடிவேலு, மாரிமுத்து, கிருஷ்ணன், சுப்பிரமணியம் ஆகியோர் பேசினர். தோழர் மாரிமுத்து முடிவில் நன்றி நவின்றார்.

தென்னிந்திய நடிகர் சங்க அனுதாபம்

27—5—56 காலை 10-மணிக்கு, தென்னிந்திய நடிகர் சங்கத்தின் காரியாலயத்தில் திரு. எஸ். பீர் முகம்மது தலைமையில் நடைபெற்ற மாதாந்திரக் கூட்டத்தில், சங்கத்தின் செயற்குழு உறுப்பினரும், பிரபல நடிகையுமான திருமதி எம். ஆர். சந்தானலட்சுமி அவர்களின் மரணத்திற்கு சங்கம், தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டது.

தி. மு. கழகத்தின் இலட்சியம் நியாயமானதே!

நிதி மந்திரி சுப்பிரமணியம் பேசுகிறார்

உதகை, மே 27—

"தென்னாட்டிற்கு, ஒரு தனி சுதந்திர ஆட்சி வேண்டுமென தி. மு. கழகத்தவர் கோருவது மிக நியாயமானதே—பொருத்தமானதே; ஏனெனில், மொழிவழி மாநிலம் கோரும் ஒருவர், அதே நேரத்தில் இந்தியாவின் அடிப்படை ஒற்றுமை பற்றியும் பேச முடியாது. மொழிவழி மாநிலம் என்ற கோரிக்கையே தவறானது; பல ஆண்டுகளுக்கு முன்பு, காங்கிரஸ் இது குறித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றிவிட்டது என்பதால், இப்போது நாட்டில் உள்ள சூழ்நிலைகள் மாறிவிட்ட பின்பு, அந்தத் தீர்மானத்தை அமுல் செய்யவேண்டும் என்ற கட்டாயம் இல்லை.

"ஒரே குடும்பத்தின் உறுப்பினர்கள் பல்வேறுபாடான குணங்கள் உடையவர்களாயிருப்பதைப் போலத்தான்; இந்தியாவிலிருப்பவர்களும் மொழி—மதம்—பழக்கவழக்கங்களால் வேறுபட்டு விளங்குகிறார்கள். இந்த வேறுபாடுகளின் அடிப்படையில் இந்தியாவைப் பிரிக்க வேண்டும் என்பது எத்தனை பெரிய அறிவீனம் தெரியுமா? இந்தியாவின் அடிப்படை ஒற்றுமையைப் பாதிக்கும் ஆபத்து, அதுபோன்ற ஒரு புனரமைப்பில் எவ்வளவு உண்டு தெரியுமா?"

என்றெல்லாம், கனம் மந்திரி சுப்பிரமணியம் பேசியிருக்கிறார், உதகமண்டலம் கோடைவாசஸ்தலத்தில் விருந்து கொண்டு!

மேலும் பேசிய அவர், தட்சிணப் பிரதேசம் என்ற பெயரில் தமிழகமும்—மலையாளமும் இணைந்த இருமொழி மாநிலம் வேண்டுமென்றும், அது தமிழகத்தின் அபிவிருத்திக்கு பெரிதும் உதவும் என்றும் பேசியிருக்கிறார்.

★

வரவேற்கிறோம்!!

"தி. மு. கழகம் தேர்தலில் போட்டியிடுவது என்று முடிவெடுத்திருப்பதை நான் வரவேற்கிறேன்; ஏனெனில் அப்போதுதான் அவர்கள் ஒரு அரசியல் கட்சி எப்படி இயங்க வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ள முடியும்"

என்பதாக நிதிமந்திரி சுப்பிரமணியம் கோவையில் பேசியிருக்கிறார்.

ஈ. வெ. கி. சம்பத் தெளிவுரை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யவையும் எழுதியவையுமடங்கிய புத்தகங்கள் நமக்குச் சொல்கின்றன.

"பலர், நேருவின் புத்தகங்களை வாங்குகிறார்கள்—பெருமைக்காக—! 'நமது நூலகத்திற்கு இருக்கட்டும்-' என்று! அட்டையைத் தொட்டுப் புரட்டிப் பார்க்கிறார்கள்; 'கொடுத்த ஏழு ரூபாய் பெறுமானதுதான்' என்று எண்ணி திருப்திப் பட்டுக்கொண்டு, புத்தக அறையில் உள்ள அலமாரியில் திணித்துவிடுகிறார்கள்; பிரித்துப் படிப்பதே இல்லை. பின்னர் அவரது மகனோ, பேரனோ அந்தப் புத்தகங்களை, பழைய புத்தகம் வாங்குவோரிடம் விற்று விடுகின்றனர்.

"ஆனால், அந்தப் புத்தகங்களை விரித்துப் படிப்பவர்களுக்குப் புரியும்—இத்தனை பெரிய முரண்பாடுகள் மலிந்த இவர், எத்தனை பெரிய புகழுக்குப் பாத்திரமானவராக்கப்பட்டிருக்கிறார்—என்பது!

"கம்யூனிஸ்டுகள், முன்பு, எதை, 'வேண்டும், வேண்டும்' என்று அழுத்தமாகக் கூறிவந்தார்களோ, அதைப் பின்பு—இன்று, 'வேண்டாம்' என்று, அதனினும் அழுத்தமாகக் கூறுகிறார்கள்!

"முன்பு, குறிப்பிட்ட ஒரு பிரச்சினைக்குத் தரப்படும் முடிவு 'தீதானது; வேண்டாதது; இந்த முடிவு மனித சமுதாயத்திற்கே பெரிய சாபத்தீடு' என்று பேசுவார்கள்; பின்பு—இன்று, எந்த முடிவை 'பெரும் சாபத்தீடு' என்று வாணித்தார்களோ—கண்டித்தார்களோ—எதிர்த்தார்களோ, அதே முடிவை ஏற்றால்தான் மக்களுக்குச் சாபவிமோசனம் கிடைக்கும் என்று வாதாடுவார்கள்.

"இந்தக் குழப்பங்களை எல்லாம் நாட்டு மக்கள் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று நாம் விரும்புகிறோம்; ஏன்?

"இந்தக் கொள்கை குழப்பங்களுக்கு ஊடேதான், அந்த மனிதர்களின் உள்ளம் எப்படிப்பட்டது என்பதற்கும், இந்தக்கொள்கை குழப்பவாதிகளின் சேவையினால் நாடு முன்னேற முடியுமா—முடியாதா என்ற கேள்விக்கும் உண்மையான விடையும், நமக்குக் கிடைக்க முடியும்

"கம்யூனிஸ்டுகள்தான் தங்களின் கடைசி அத்தியாயத்தில் காலெடுத்து வைத்துவிட்டார்களே; அவர்களைப் பற்றி நாம் ஏன் பேச வேண்டும்—என்று சிலர் என்னிடம் கேட்டார்கள்.

"கம்யூனிஸ்டுகள் தங்களின் கடைசி அத்தியாயத்தில் காலெடுத்து வைத்திருக்கிறார்கள் என்பது உண்மையானது என்றால், நாம் அதற்காக வருத்தப்படுகிறோம்; ஆனால், உண்மையிலேயே அவர்கள் கடைசி அத்தியாயத்தில்தான் காலெடுத்து வைத்துள்ளார்களா? அல்லது, 'தொடரும்' என்று போட்டு, இரண்டாவது பாகம் துவங்குவார்களா என்பது தெளிவாக வேண்டுமே!

"அப்படி அவர்கள் இரண்டாவது பாகம் துவங்கக்கூடாது என்று எச்சரிப்பதற்காகத்தான்—அவர்களுடைய கரம், 'முற்றிற்று' என்று எழுதக் கூசினாலும், நாட்டு மக்களுடைய கரம், 'முற்றிற்று! முற்றிற்று!! முற்றிற்று!!!' என்று மூன்று முறை திட்டமாக எழுத வேண்டுமென்ற காரணத்திற்காகத்தான்—அவர்களுடைய கொள்கைக் குழப்பங்களை நாம் பேசுகிறோம்

"இன்று ஓர் செய்தி வந்தது—'தேர்தலில் தி. மு. கழகத்துடன் சேர, அணி அமைக்க கம்யூனிஸ்டு கட்சியின் நிபந்தனை'—என்று!

"ஏதோ, 'கட்சியே, கட்சியே! என் அருமைக் கம்யூனிஸ்டு கட்சியே! தேர்தலில் நிற்க விரும்புகிறேன். உன்னோடு என்னையும் சேர்த்துக்கொள்ள மாட்டாயா?'—என்று தி மு கழகம் விண்ணப்பம் விடுத்தது போலவும், உடனே கண்ணைத் திறந்து பார்த்து, 'ஓகோ! தேர்தலில நிற்க விரும்புகிறாயா? என்று கேட்டு, 'அப்படியானால், இதோ ஒரு நிபந்தனை; என்னோடு சேர்ந்து தேர்தலில் ஈடுபட,' என்று கருணை பொங்கி வழிவதால் கூறுவது போலவும் நினைத்துக்கொண்டு, கம்யூனிஸ்டு கட்சி நிபந்தனை விதிக்கிறதாம்!

என்ன நிபந்தனை அது? 'தி. மு. கழகத்தினர், தங்கள் திராவிட நாடு இலட்சியத்தைக் கைவிட்டு விட வேண்டும்' என்பதுதான், அந்த நிபந்தனை!

"யாரோ ஒரு கருணைவான், 'நீ எனது வீட்டுத் திண்ணையில் படுத்துக்கொள்ள வேண்டுமானால், உன் உயிரை விட்டு விட்டுப் பிணமாக வா! என் திண்ணையில் கிடத்திக் கொள்கிறேன்,' என்று கூறினானாம்! எப்படி இருக்கிறது அவனது கருணை?

"அதுபோல, கம்யூனிஸ்டு கட்சியினர், நாம் நமது உயிர் இலட்சியமான திராவிட நாடு கோரிக்கையைக் கைவிட்டுவிட வேண்டுமென்கிறார்கள்; நாம் பிணமாக வேண்டும் என்கிறார்கள்! இது நிபந்தனையா?

"சில கையாலாகாதவர்கள், ஒருவனை எதிர்க்க முடியாதபோது, 'நீ நாசமாய் போக; உனக்கு அதுவர—இது வர,' என்று வசைபாடுவார்கள்—சபிப்பார்கள்; அதுபோன்றதுதான், கம்யூனிஸ்டுகள் நம்மைப் பார்த்துக் கூறுவதும்!

"நம்மை எதிர்க்கவோ முடியவில்லை; நாம் இருப்பது இடைஞ்சலாக இருக்கிறது—பேராபத்தாக இருக்கிறது; எனவே, நம்மை நோக்கி, 'தி.மு.க.-வே! நீ செத்துப் போ! நீ நாசமாய் போ! நீ செத்துப் போனால்தான், உன்னுடைய சாவில்தான் எனக்கு வாழ்வு இருக்கிறது,' என்று கூறுகிற கையறு நிலையில்—கையாலாகாத நிலையில் வசைபாடுகிறார்கள்—கம்யூனிஸ்டுகள் என்பதைத்தான், அவர்கள் விதிக்கும் நிபந்தனை நமக்குச் சொல்லுகின்றது.

"இங்கே உள்ள கம்யூனிஸ்டுகளின் நிலை இது! ஆனால், அகில இந்திய ரீதியில், அவர்கள் தங்களுக்கென ஒரு கொள்கை இருப்பதாகக் கூறுகிறார்கள்.

"அப்படி அகில இந்திய ரீதியில் இவர்கள், 1942-ல் கொண்டிருந்த கொள்கை என்ன? 1945-ல் கொண்டிருந்த கொள்கை என்ன? 1948-ல் அந்தக் கொள்கைகள் என்னவாயின? 1949-ல் இவர்கள் எப்படி நிலை தடுமாறினார்கள்? 1955-ல் எப்படிப் பேந்தப் பேந்த விழித்தார்கள் என்பதை நாம் அறிய முற்படலாம்."

[பேச்சு முடியவில்லை; தொடர்ந்து வெளிவரும்]

பொதுக்கூட்டம்

✶

ஆலத்தம்பாடி
கடைவீதியில்
30—5—56 மாலை 6 மணிக்கு
தலைவர்:
ஓ. ஏ. டி. கே. பாலு
பேசுபவர்:
ஈ. வெ. கி. சம்பத்

ஈ. வெ. கி. சம்பத்

பழயங்குடி தி. மு. கழகக் கட்டிடத்தை திறந்து வைப்பார்

30—5—56 காலை 9-மணியளவில், பழயங்குடி தி. மு. கழகக் கட்டிடத்தை தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் திறந்து வைப்பார்.

புதுவை வட்டக் குழு

"3—6—56 காலை 9 மணிக்கு புதுவை தி. மு. கழகத்தில், வட்டக்குழு நடைபெறும். பொருள்: 6-5-56ல் நடைபெற்ற மே விழாக் கூட்ட வரவு - செலவு ஆய்தல். புதுவை வட்டத்திலுள்ள ஒவ்வொரு கிளையின் செயலாளரும—அவசியம் கலந்து கொள்ள வேண்டுகிறேன்,"

என்று, புதுவை தி மு க வட்டக் குழுச் செயலாளர் ச. சிவப்பிரகாசம் அறிவிக்கிறார்.

புதுவை தி. மு. கழக உறுப்பினர் கூட்டம்

"3—6—56 மாலை 6 மணிக்கு புதுவை தி. மு. கழகத்தில், உறுப்பினர் பொதுக்கூட்டம் நடைபெறும். அதுபோது, குறைந்துள்ள செயற்குழுவினருக்குப் பதிலாகத் தேர்தல் நடைபெறும். உறுப்பினரனைவரும் குறித்த நேரத்திற்கே தவறாது வரவேண்டுகிறேன்."

என்று, செயலாளர் ச. சிவப்பிரகாசம் அறிவிக்கிறார்.

****

மாபெரும்

பொதுக்கூட்டம்

3-6-56 ஞாயிறு மாலை 6-மணிக்கு

திருவல்லிக்கேணி கடற்கரையில்

தி. மு. கழகப் பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

அவர்கள்

மாநில மாநாட்டின் முடிவுகள்

குறித்து விரிவுரையாற்றுவார்கள்

—தி. மு. க. தலைமை நிலையம்

****

விநோபா பாவே உண்ணாவிரதம்

வரும் ஜூன் 1-ந் தேதி முதல் மூன்று நாட்களுக்கு, ஆசசாரியா விநோபாபாவே உண்ணாவிரதம் கடைபிடிக்கப்போவதாக அறிவித்திருக்கிறார்.

பூதான யாத்திரையை முடிக்கு முன 'சித்தசுத்தி' அடைவதற்காக, தான் இந்த 'நோன்பை' மேற்கொள்ளுவதாகவும் அவர் அறிவித்திருக்கிறார்.

'தென்னாட்டில் எனது இயக்கத்தை வெற்றிபெறச் செய்வதற்கு, எனக்குத் தேவையான பலத்தையும், உறுதியையும், இந்த உண்ணாவிரதம் அளிக்குமென நான் நமபுகிறேன்' என்றும அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

உணவுத் தானியங்கள் ஏற்றுமதியாகும்?

புதுடில்லி, மே 26—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் இந்தியா உணவுத் தானியங்களை ஏற்றுமதி செய்து ரூ. 400 கோடி மதிப்புள்ள வெளிநாட்டுச் செலாவணியைப் பெறும் என்று நம்புவதாக இந்தியப் பேரரசின் நிதிஅமைச்சர் மக்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

மதுரை தமிழ்ச் சங்கப் பொன் விழா

31—5—'56 நிகழ்ச்சிகள்

✶

இயல் அரங்கு:

அமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் தலைமையில் — திரு. மா. இராசமாணிக்கனார் 'சோழர் காலம்'; திரு ப. ஜீவானந்தம் 'தமிழ் இலக்கியத்தில கருத்துப் புரட்சி'; திருமதி எஸ். பாகிரதி 'தமிழர் காதல வாழ்வு'; திரு. சி. கே. சுப்பிரமணிய(முதலியார்) 'சைவம்'; திரு நவரத்தினம் 'ஓவியக் கலை'; திரு. டி. வி. சதாசிவப் பண்டாரத்தார் 'கல்வெட்டுக்கள்'; திரு. கி. இராமலிங்கனார் 'மடங்களின் தமிழ்த் தொண்டு'—ஆகிய தலைப்புகள் பற்றி சொற்பொழிவாற்றுவார்கள்.

இசை அரங்கு:

இராசா சர்.எம்.ஏ. முத்தையா (செட்டியார்) தலைமையில், சித்தூர் - சுப்பிரமணிய(பிள்ளை) இன்னிசை விருந்து நடைபெறும்.

நாடக அரங்கு:

திரு. சி. என். அண்ணாதுரை தலைமையில், நடிப்பு – இசைப் புலவர் கே ஆர். இராமசாமி குழுவினரின 'ஓர் இரவு' நாடகம் நடைபெறும்.

முன்னாள் பிரெஞ்சுத் திட்டுக்கள்

சட்டபூர்வமான அதிகார மாற்றம்

புதுடில்லி, மே 28—

புதுவை, காரைக்கால், ஏனாம், மாகி ஆகிய முன்னாள் பிரெஞ்சுத் திட்டுக்கள்—18 திங்களுக்குமுன் இந்திய சர்க்காருக்கு நிர்வாக மாற்றம் செய்யப்பட்டவை, இன்று, சட்டபூர்வமான அதிகார மாற்றம் செய்யப்பட்டன—இந்தியா, பிரெஞ்சுப் பிரதிநிதிகள் கையொப்பமிட்ட ஒரு ஒப்பந்தம் மூலம்.

இந்த ஒப்பந்தத்தில், இந்திய சர்க்காருக்காகப் பிரதமர் நேருவும், பிரெஞ்சு சர்க்காருக்காகப் புதுடில்லியில் உள்ள பிரெஞ்சுத் தூதுவர் ஆஸ்ட் ரோராக் என்பாரும் கையொப்பமிட்டனர்.

ஒப்பந்தப்படி, புதுவையில் உள்ள பிரெஞ்சுக் கல்லூரி தொடர்ந்து பிரெஞ்சு சர்க்காராலேயே நிர்வகிக்கப்படும் என்றும், பிரெஞ்சுக் கலாச்சாரம் பாதுகாக்கப்படும என்றும், இன்னும் 6 திங்களுக்குள் முடிவுசெய்து கொள்ளாவிட்டால், இந்தப் பகுதிகளில் பிறந்த பிரெஞ்சு தேசத்தவர் இந்திய குடிமக்களாகிவிட வேண்டும் என்பதும் குறிப்பிடத்தகுந்த அம்சங்களாகும்.

இந்த ஒப்பந்தத்தை இனி, இந்தியா, பிரான்சு ஆகிய இரு நாட்டு மக்கள் சபைகளும், அங்கீகரிக்க வேண்டும்.

ஒப்பந்தம் 31 அம்சங்கள் கொண்டதாகும்.

வேடிக்கையாகத் தோன்றுகிறதாம்!

புதுடில்லி, மே 26—

சுபாஷ் சந்திரபோஸ் 1952-ம் ஆண்டில் பீகிங்கில் இருந்ததைக் கண்டதாகக் கூறப்படுகிற செய்திகள் வேடிக்கை நிறைந்தவையாகத் தமக்குத் தோன்றுவதாகவும், நேதாஜி பற்றிய விசாரணைக் குழு பீகிங் செல்லாதென்றும் மக்கள் சபையில், பிரதமர் நேரு தெரிவித்திருக்கிறார்.

மே திங்கள் 25-ந் தேதியன்று வடகிழக்கு எல்லைப் பகுதியில் நடைபெற்ற ஒரு துப்பாக்கிச் சண்டையில் இந்திய இராணுவத்தினரால் 18 நாகர்கள் சுட்டு வீழ்த்தப்பட்டனர் எனத் தெரியவருகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.